சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 09.03.2026

| | | |
|---|---|---|
| ஆண்டு பட்டிகை வழக்கு எண். | : | **3/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | அருள்கொடி |
| தந்தை பெயர் | : | செல்வம் |
| கிராமம் | : | ஏத்தக்குடி |
| தாலுக்கா | : | மன்னார்குடி |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 35 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை**

சம்பவ சமயத்தில் 2ம் எதிரி சுந்தர், மோகன் மற்றும் ராஜராஜன் ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டுள்ளதாக மோகன் என்பவர் அ.சா-1 துரையரசன், அ.சா-2 குமரவேல், அ.சா-5 விக்னேஷ், வெங்கடேசன்,

செந்தில், ராஜ், தமிழரசன் மற்றும் ஆகியோர்கள் மீது மோகன் என்பவர் புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் ஆமாம். அதில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் ஆமாம். எங்களில் ஒரு தரப்பினரும், ஊரில் உள்ளவர்களும் என ஒரு தரப்பினர் என இரண்டு பிரிவுகளாக இருந்து எங்களுக்குள் ஏற்பட்ட தள்ளு முள்ளின் காரணமாக தான் எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் ஆமாம். இந்த வழக்கு சம்பவத்தில் எங்களை இந்த எதிரிகள் யாரும் தாக்கினார்களா என்றால் சம்பவ நேரத்தில் சம்பவ இடத்தில் எங்களை யார் தாக்கினார்கள் என்று தெரியாது. யார் தாக்கினார்கள் என தெரியாத நிலையில் முதல் விசாரணையில் எதன் அடிப்படையில் இந்த எதிரிகள் தாக்கினார்கள் என்று கூறினேன் என்றால் காவல் துறையினர் கூறியதன் அடிப்படையில் கூறியுள்ளேன். இந்த வழக்கில் உள்ள எதிரிகள் யாரையும் குறிப்பிட்டு என்ன குற்றம் இழைத்துள்ளார்கள் என சொல்ல இயலாது.

**அனுமதியின் பேரில் அரசு தரப்பில் மறு விசாரணை:**

(இந்த சாட்சியானவர் முதல் விசாரணையில் சம்பவம் நடந்ததாக கூறிவிட்டு தற்போது அவர் அளித்துள்ள சாட்சியத்திற்கு எதிராக மாற்றி சாட்சியம் அளிக்கிறார் என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**<u>அரசு தரப்பு மறு விசாரணை தொடர்ச்சி</u>**

முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் நடைபெற்றுள்ளது என்று, பின்னர் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் சம்பவம் நடைபெற்றுள்ள நிகழ்வை மறைத்து அதுவும், முதல் விசாரணையில் கூறிய பின்னர் தற்போது உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம் செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.09 18:03:54 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.